பிற்பகல் 1.10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 118 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 118 வரை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்

1995 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் சார் வாரியச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 39/1995) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 40/1995),* மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்

***மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 40/1995) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 8-11-1995-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத் திருத்தத்தை நான் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன். காரணம், லாட்டரிச் சீட்டு என்பது இந்தச் சமுதாயத்தை எப்படி சீரழித்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். சிங்கிள் நம்பர் லாட்டரி சீட்டு போன்றவற்றின் விற்பனையாலும், அதே போல உடனடி லாட்டரி என்றெல்லாம் வைத்துக் கொண்டு அதை கிழித்து கோடிக்கணக்கிலே பணத்தை புரட்டிக் கொண்டிருக்கிற காரணத்தாலே, நான் எதிர்க்கிறேன். வேலூரிலேகூட இரண்டு வாரத்திற்கு முன்னாலே ஒன்னரை லட்சம் ரூபாய் பறிகொடுத்துவிட்டு ஒருவர் லாட்ஜிலே சென்று தூக்கு போட்டு இறந்துவிட்டார். இப்படி கொடுமைகளைக் கொண்டிருக்கிற லாட்டரி சீட்டுக்கு நாமும் ஏதோ ஒரு சலுகை காட்டுவது போல - ஒரு காம்பவுண்ட் டேக்ஸ் ஆக 7 டி செக்ஷன் கீழ் டாக்ஸ் கட்டிவிட்டால் பிறகு அதை வாங்கி விற்கிற மற்ற வணிகர்கள் அதற்கான டாக்சை இங்கே செலுத்தவேண்டாம் என்பதற்காக இங்கே ஒரு விதியைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

பிற்பகல் 1-15

இப்படி லாட்டரிச் சீட்டுகளினாலே அவர்கள் பணத்தை மிகச் சுலபமாகச் சம்பாதிக்கிறார்கள். மிகச் சுலபமாக சம்பாதிக்கக்கூடிய ஒன்று அது. பொதுவாக அந்த லாட்டரிச் சீட்டைத் தடை செய்யவேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் வணிகர்களுக்கு நாம் இப்படிப்பட்ட ஒரு சலுகையைக் காட்டி, இதுபோன்ற காம்பவுண்டு வரி கட்ட அனுமதிக்காவிட்டால், ஒவ்வொருவரும் வரி கட்டியாகக் வேண்டுமென்ற நிலை வந்தால் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு இங்கே வரியாக வரும் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட அந்தப் பணத்தை இழக்க வேண்டுமா? ஏற்கனவே பணம் இல்லாமல் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிற நாம், நிதி நெருக்கடியிலே சிக்கி தவித்துக் கொண்டிருக்கிற நாம், இதுபோன்ற சலுகைகளை நாம் ஏன் காட்டவேண்டும் என்பதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் இதுபோன்ற சலுகைகளை அந்த காம்பவுண்டு வரி கட்டுவதற்கெல்லாம் அனுமதித்துவிட்டு, பொதுவாக இல்லாதவர்களுக்கு, ஏழை எளிய

1995 நவம்பர் 10] [திரு. சி. ஞானசேகரன்]

மக்களுக்கு இதுபோன்ற பழக்க வழக்கங்களெல்லாம் வராமல் இருப்பதற்கு நாம் தடை செய்தாக வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால், இந்தச் சலுகைகளை நீங்கள் காட்டவேண்டாம். ஆகவே, காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் பல கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய ஒரு பிரிவை நாம் வைத்துக் கொண்டிருக்கும்போது அதை வேண்டாம் என்று உதறித் தள்ளுவது, அது அறிவின்பாற்பட்டதாக அமையாது. ஆகவே, அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இதுபோன்ற திருத்தத்தை தயவுசெய்து கொண்டுவர வேண்டாம், வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தினுடைய 6-வது திருத்தத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த லாட்டரி சீட்டில் காம்பவுண்டு வரி போடுகின்ற முறையில் இன்றைக்கு சில்லரை வியாபாரிகள் வரி கட்டவேண்டியதில்லை. அது மொத்த வியாபாரி யாராவது ஒருவர் கட்டிவிடலாம் என்கிற முறையிலே இந்தச் சட்டத்தை இங்கே இயற்றியுள்ளீர்கள். நான் இந்த அவையிலே இதற்கு முன்னாலே பேசும்போது சொல்லியிருக்கிறேன், லாட்டரிச் சீட்டை முறைப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல், இந்த லாட்டரிச் சீட்டினால் பொதுமக்கள், ஏழை எளிய மக்கள் படுகின்ற துன்பம் அதிகமாகும். இங்கே சுரண்டல் லாட்டரி என்று சொல்கிறார்கள். அதைப்போல பல்வேறு மாகாணத்திலிருந்து லாட்டரிகள் வருகின்றன. இன்னும் நம்முடைய மாகாணத்தில் உள்ள லாட்டரிச்சீட்டு. இவைகளெல்லாம் சேர்ந்து பொதுமக்களை கசக்கிக் கொண்டிருக்கும் லாட்டரியாகும். இதை ஒரு பெரிய சூதாட்டம் என்றே சொல்லலாம். இது பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிற ஒன்றாகும். இதிலேயும் கள்ளச்சீட்டு அடிக்கிறார்கள். சமீபத்திலேகூட ஒரு லாரியைப் பிடித்திருக்கிறார்கள். இது முறைப்படுத்தப்படவேண்டும் என்று நான் முதலிலேயே சொன்னேன். லாட்டரிச் சீட்டைப் போட்டவுடன், அது எந்த மாகாண லாட்டரிச் சீட்டாக இருந்தாலும் சரி, அந்த லாட்டரிச் சீட்டுக்கு ஒரு நெம்பரைக் கொடுத்து அந்த நெம்பரின் மூலமாக வினியோகம் செய்வதற்கு என்று ஒரு இடத்தை வைத்து அதை மொத்த வியாபாரியிடம்

கொடுத்து அந்த நெம்பரை கரெக்டாக ஒரு சில்லரை வியாபாரியிடம் கொடுத்தால் அது முறைப்படுத்தப்படும். ஆனால் முறைப்படுத்துவதில் சில இடைஞ்சல்கள் இருக்கின்றன என்பதற்காக காம்பவுண்ட் வரி போடுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மொத்தத்தில் நான் சொல்வது என்னவென்றால், இந்த லாட்டரிச் சீட்டினால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த லாட்டரிச் சீட்டை அறவே ஒழித்துக்கட்டினாலும் பரவாயில்லை. அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் காம்பவுண்டு வரி போடுவதால் அதிகமாக வந்துவிடாது. நிச்சயமாக அது அதிகமாக வராது. இன்னும் முறைப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, இந்த கள்ளச் சீட்டை தடுப்பதற்கு இன்னும் முறைப்படுத்தி அரசாங்கத்தினுடைய வருமானத்தை கூட்டுங்கள். இல்லையென்றால், இந்த லாட்டரியை நீங்கள் ரத்து செய்யுங்கள் என்று கூறி அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரி மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக லாட்டரிச்சீட்டு விற்பனையில் ஒருமுனை வரி சட்டத்திருத்தம் மட்டும்தான் வந்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல லாட்டரி சீட்டு இன்றைக்கு தமிழகத்திலே ஒரு சூதாட்டமாக மாறியிருக்கிறது. இதிலே ஒரு நம்பர் லாட்டரிச் சீட்டு என்று ஒன்று இருக்கிறது. அதற்கு உடனே பரிசு. இதனால் பலபேர், மூட்டை தூக்குகின்றவர்கள், வண்டி இழுப்பவர்கள், கடையில் வேலை செய்கிறவர்கள், கூலித் தொழிலாளி இவர்களெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் சம்பாதித்தால் வாழ்க்கை நடத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றவர்கள், மூட்டை தூக்கி காசு வந்தவுடன் நேராக லாட்டரிச் சீட்டு வாங்குகிறான். வாங்கி தேய்த்துப் பார்த்து பரிசு இல்லையென்றதும் தலையில் கையை வைத்துக் கொண்டு போகிறான். இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற நிலைமையைச் சொல்கிறேன். இதற்கு நாம் தடைச் சட்டம் கொண்டு வரவேண்டும். அநேகமாக சிவகாசியிலே பேப்பர் அடிக்கிற முதலாளிகளுக்கு ஒரு முனை வரி ஒரு பெரிய சலுகை அளிக்கின்ற சட்டம். பெரும் முதலாளிகளுக்கு மொத்த லாட்டரிச் சீட்டினுடைய வியாபாரிகளுக்கு சலுகை அளிக்கின்ற சட்டமாக இது வந்திருக்கிறது. இதை முற்றிலும் நான் மறுக்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவைக்

கொண்டு வரக்கூடாது என்று நான் வன்மையாக மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையினாலே நம்முடைய மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களுக்கு உண்மையிலேயே ஏழை எளிய மக்களுடைய நன்மையிலே, தமிழகத்தின் ஏழை எளிய மக்கள் மீது அக்கறை இருக்கிறது என்று சொன்னால், கள்ளச் சீட்டை அச்சடிப்பவர்கள்மீது கடும் தண்டனை விதிக்க சட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அப்போதுதான் கட்டுப்படுத்த முடியும். அநேகமாக பேருந்துகளில் பார்த்தால் 5 லட்ச ரூபாய் சீட்டை இரண்டு ரூபாய் என்கிறார்கள். ஒரு கோடி ரூபாய்க்கான சீட்டு, 10 ரூபாய் விலையுடையதை இரண்டு ரூபாய்க்கு விற்கிறார்கள். 10 ரூபாய்க்கு விற்க வேண்டிய சீட்டை இரண்டு ரூபாய்க்கு விற்றால் எப்படி கட்டுப்படியாகும். இதுவெல்லாம் இந்த நாட்டுக்குத் தெரியாதா? இதுவே ஒரு சூதாட்டமாக இருக்கிறது. அவற்றையெல்லாம் பிடித்து, விற்பவர்கள் மட்டுமல்ல, அச்சடித்துக் கொடுக்கின்றவர்கள் மீதுகூட--இதுபோன்ற பிரஸ்கள் இருக்கின்றன அல்லவா, அவற்றையே நீங்கள் சீல் வைக்கவேண்டும், மூட வேண்டும். ஒரு மிகப்பெரிய மோசடி, பகிரங்கமாக, பட்டப்பகலிலே அனைவருக்கும் தெரிந்து நடக்கிற இந்த சூதாட்டத்தை தடை செய்கின்ற சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமே தவிர அதற்கு மாறாக இது போன்ற பெரிய லாட்டரி சீட்டு வியாபாரம் செய்கின்ற சூதாட்டக்காரர்களுக்கு வழிவகுக்கின்ற சட்டத்தை நான் மறுத்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் எடுத்துரைத்ததைப்போல் லாட்டரிச் சீட்டு விநியோகமுறையால் பொதுமக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை, அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதில் அரசுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. அதனை மிகத் தெளிவாக உணர்ந்துதான் அமரர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் லாட்டரிச் சீட்டுகளை தமிழகத்தில் தடை செய்து உத்தரவிட்டார்கள். ஆனால் அதற்கு உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் குறுக்கிட்டு, இறுதியாக தனியார் நடத்துகின்ற

லாட்டரிச் சீட்டுகளை மாநில அரசுகள் அனுமதிக்க வேண்டியதில்லை. அதே நேரத்தில் ஒரு அரசே நடத்துகின்ற லாட்டரிச் சீட்டுகளை அனுமதிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்த வகையில்தான் இன்றையதினம் சில மாநிலங்கள் தாங்களே நடத்துகின்ற லாட்டரிச் சீட்டுகள் என்று உத்தரவாதம் அளித்து அறிமுகப்படுத்தியவற்றை மட்டும் தமிழ்நாட்டில் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் வழிகாட்டுதலின்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் லாட்டரிச் சீட்டை, நீதிமன்றத் தீர்ப்பின் துணை கொண்டு அரசுக்கு எதிராக மக்களுடைய நலனுக்கு எதிராக நடத்தப்படுவதை தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் 20% வரி கொண்டுவரப்பட்டது. ஆனால் விளைவு அரசுக்கு எந்த வருவாயும் வந்து சேரவில்லை. அதற்குப் பிறகு, 15% ஆகக் குறைத்து, அரசுக்கு வருவாய் வரும் என்று எதிர்ப்பார்த்தோம், அப்போதும் எந்த வருவாயும் வரவில்லை. அதற்குப் பிறகு 8% ஆக்கப்பட்டது. அதிலும் பலனில்லை. அதற்குப் பிறகு 3% ஆனது. அதற்கும் பலன் இல்லை. இப்போது சில மாநிலங்கள் தாங்களே முன்வந்து தங்களுடைய அதிகாரம் பெற்ற ஒருவர் மூலம் இந்த லாட்டரிச் சீட்டை நாங்கள் விநியோகிக்கிறோம் என்று ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த மாநிலங்களினுடைய உத்தரவாதத்தின் பேரில் அவர்களுடைய ஒட்டுமொத்த முகவராக, இந்த மாநிலத்திற்காக நியமிக்கப்பட்டவர், ஒட்டுமொத்த வரியாகச் செலுத்தத் தயாராக இருக்கின்றோம் என்று அரசுக்கு அவர்களால் வேண்டுகோள் வைக்கப்பட்ட பிறகு, அந்த வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒட்டுமொத்த வரி, காம்பவுண்ட் டேக்ஸ் முறை கடந்த நிதிநிலை அறிக்கையில் நிறைவேறிவிட்டது. 1-4-1995 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. கடந்த கால கட்டங்களில் 1994-95-ம் ஆண்டில்தான் அதிகமான வருவாய் வந்திருக்கிறது-- 90 லட்ச ரூபாய் 12 மாதத்தில்-- அதில் ஏறக்குறைய 40 லட்ச ரூபாய் தமிழ்நாடு லாட்டரிச் சீட்டின் மூலம் வந்த வருவாய் ஆகும். 50 லட்சத்திற்கு உட்பட்டுத்தான் ஏனைய மாநில்ங்கள் விற்ற லாட்டரிச் சீட்டுகள் மூலம் வருவாய் வந்தது. இப்போது 1-4-1995 முதல் ஒட்டுமொத்த வரி விதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இந்த 6 மாத காலத்தில் ஏப்ரல் மாதம், மே மாதம், இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டாலும், சட்ட விதிமுறைகள், வகுக்கப்பட்டு, நடைமுறைக்கு வரவில்லை. அந்தக்காலக்கட்டத்திலும் வரிகள் கட்டுவது வணிகர்களால் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

1995 நவம்பர் 10] [திரு. வ. சத்தியமூர்த்தி]

இந்தச் சூழ்நிலையில் ஏறக்குறைய இந்த 4 மாத காலத்தில் 320 லட்ச ரூபாய், 3 கோடியே 20 லட்ச ரூபாய், வருவாய் வந்திருக்கிறது. இதுவரையில் லாட்டரி வினியோகத்தில் இந்த அளவுக்கு வருவாய் வந்தது இல்லை. இப்போது இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற சட்டத் திருத்தத்தில் புதிய சலுகைகள் ஏதும் அளிக்கப்படவில்லை. தமிழகத்தில் ஒரு முனை வரிவிதிப்பு முறைதான் இருக்கிறது. ஒரு குலுக்கலுக்கு ஒரு முகவர் மாநிலம் முழுவதற்கும் ஒட்டுமொத்தமாக நிர்ணயிக்கப்பட்ட தொகையை கட்டிவிட்டால் சில்லரை வியாபாரிகள் வரி செலுத்த வேண்டியதில்லை என்ற விளக்கத்தை துறை அதிகாரிகளுக்கு இந்தச் சட்டத்திருத்தம் மூலம் தெரிவிக்கிறோம்.

பிற்பகல் 1–25

ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற கருத்து இதுதான் என்பது இதன்மூலம் விளக்கப்பட்டிருக்கிறதே தவிர புதிதாக எந்தச் சலுகையும் அளிக்கப்படவில்லை. எனவே லாட்டரி சீட்டு வினியோகத்தைத் தடை செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் இருவேறு கருத்துக்கு இடம் இல்லை. நீங்கள் சொன்னதுபோன்று ஒரு நம்பர் லாட்டரி சீட்டு, உடனடி லாட்டரிச் சீட்டு போன்றவற்றால் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்தவரையில் நம்மைவிட முதலில் உணர்ந்தவர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். ஆகவே அரசின் உத்தரவின் மூலம் இந்த இரண்டு லாட்டரிச் சீட்டு வகைகளையும் தடை செய்து தடையுத்தரவு வழங்கினார்கள், சில மாதங்களுக்கு முன்பு. ஆனால் லாட்டரி சீட்டு உரிமையாளர்கள் அந்தந்த மாநிலங்களின் முகவர்கள் மூலம் உயர்நீதிமன்றத்தை அணுகி அதற்கு ஒரு தடையைப் பெற்றிருக்கிறார்கள். அதாவது அரசின் தடையுத்தரவுக்கு உயர்நீதிமன்றம் ஒரு தடை விதித்திருக்கிறது. அந்தத் தடை விதிப்பில் உடனடி லாட்டரிச் சீட்டுக்கு நீதிமன்றம் அனுமதி அளித்து இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தினுடைய தடையுத்தரவு பிரகாரம் ஒரு நம்பர் லாட்டரிச் சீட்டு தமிழகத்தில் விற்கக் கூடாது என்பதற்கான அனுமதியும் அதில் இருக்கிறது. உயர்நீதிமன்றத்தின் தடையுத்தரவும் ஒரு நம்பர் லாட்டரி நடத்தக் கூடாது என்று உள்ளது. எனவே ஒரு நம்பர் சீட்டு தமிழகத்திலே எங்கு விற்கப்பட்டாலும் அது தடுக்கப்பட வேண்டிய ஒன்று. தடுப்பதற்கு சட்டம் வழிவகை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொழில் தடுக்கப்பட முடியாத காரணத்தால்தான் ஒட்டுமொத்த வரி விதிக்கப்படுகிறது. அதற்கு உகந்த வருவாய் வந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து இந்தச் சட்டத்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பலமுனை வரிவிதிப்பிலிருந்து ஒரு முனை வரிவிதிப்பாக மாற்றியதன்மூலமாக 3 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருவாய் வந்திருக்கின்றது என்று தெரிவித்திருக்கிறார்கள். இவ்வாறு அதைப் பொறுத்தவரையில் அந்த ஒரு முனை வரி என்று விதிக்கப்பட்டதற்குப் பின்னால் என்ன வகையில் அரசின் வருவாய் உயரப் போகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்துப் பொருட்களுக்கும் ஒரு முனை வரிவிதிப்புத் தான் இருக்கிறது. இந்த லாட்டரிச்சீட்டைப் பொறுத்தமட்டில் ஒருவர் ஒரு குலுக்கலுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு தமிழகம் முழுவதும் அது வினியோகிக்கப்படுகிறது என்றால் அந்த லாட்டரிச் சீட்டுக்களுக்கு ஒரு முறை வரி செலுத்தப்பட்டுவிட்டால் அந்த லாட்டரிச் சீட்டு அவரிடமிருந்து சப்டீலருக்கு வருகிறது. அதாவது சென்னையிலிருந்து ஒருவர் வினியோகிக்கிறார் என்றால் மதுரை, கோயம்புத்தூர் போன்ற எல்லா இடங்களிலும் மற்றும் கிராமப் பகுதிகளிலும் அது வினியோகிக்கப்படும். கையிலே தூக்குப் பைகளை வைத்துக்கொண்டு வினியோகம் செய்துகொண்டிருப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வரி செலுத்தவேண்டும் என்று சொன்னால் நடைமுறைக்கு உரிய காரியம் இல்லை. அவர்கள் பையில் கொண்டுவந்த பொருளைப் பிடித்துக் கேட்டால் இன்னார் எங்களுக்குக் கொடுத்தார்கள் என்பார்கள்; அவர்களிடம் போய்க் கேட்டால் அவர்கள் தங்களுக்கு இன்னார் கொடுத்தார்கள் என்பார்கள். இப்படியே போய் கடைசியில் சென்னையில் அதற்கு வரி செலுத்தப்பட்டிருக்கும். இதுதான் நான் சொல்வது. எங்கேனும் ஓர் இடத்திலே ஒரு லாட்டரிச் சீட்டுக்கு வரி செலுத்தப்பட்டு இருந்தால் அவ்வாறு வரி செலுத்தப்பட்ட அந்த லாட்டரிச் சீட்டுக்காக மறுபடியும் வியாபாரிகளைத் துன்புறுத்தக்கூடாது

என்கிற விளக்கம்தான் இப்போது அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.